சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 26.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | சந்தோஷ் |
| தந்தை பெயர் | : | பாஸ்கரன் |
| கிராமம் | : | ஆண்டான் கோவில்<br>மாஞ்சேரி |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | டைல்ஸ் வேலை |
| வயது | : | 24 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். அ.சா-1 அபிக்கண்ணன் என்பவரை தெரியும். எனது நண்பராவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என்ன சமூகம் என்று எனக்கு தெரியாது. கடந்த 01.01.2025 ஆம் தேதி இரவு 1 மணிக்கு மேலாக நான் ஆண்டான் கோவில் மாஞ்சேரியில் இருந்தேன். அப்போது 1 மணிக்கு மேல் அ.சா-1 எனக்கு போன் செய்தார். அவருக்கு வருவதற்கு பஸ் இல்லை என்றும், அதனால் அவரை அழைத்துச்செல்ல வருமாறு சொன்னார். நான் இரு சக்கர வாகனத்தில் எங்கள் ஊரிலிருந்து குடவாசல் பேருந்து நிலையம் சென்றேன். குடவாசல் பேருந்து நிலையத்தில் இருந்து அ.சா-1 அபிக்கண்ணன் அ.சா-2 சஞ்சய் ஆகியோர்களை எனது இரு சக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு அ.சா-1ன் ஊரான விச்சூருக்கு சென்றேன். நாங்கள் செல்லும் வழியில் கருப்பூர் முருகன் கோவில் பேருந்து நிறுத்தத்தில் ஒரு 20 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் எங்களுடைய இரு சக்கர வாகனத்தை மறித்தார்கள். ஏன் இரு சக்கர வாகனத்தை மறிக்கிறீர்கள் என்று அ.சா-1 அபிக்கண்ணன் கேட்டார். அப்போது 1ம் எதிரி ஹரிகரன், 3ம் எதிரி சிவராமன் மற்றும் ஒருவர் அ.சா-1-யை பார்த்து பற தேவடியா பயலே இது எங்க ரோடுடா நாங்க அப்படிதான் ஆடுவோம், அப்படிதான் வண்டியை மறிப்போம் என்று பேசிக்கொண்டிருக்கும் போதே அ.சா-1 அபிக்கண்ணனை 1ம் எதிரி ஹரிகரன், 3ம் எதிரி சிவராமன் மற்றும் ஒருவர் கருவ கட்டையால் அடித்தார்கள். அதை கேட்க சென்ற அ.சா-1ன் தம்பியான அ.சா-2 சஞ்சயை 2ம் எதிரி முகேஷ், 5ம் எதிரி திவாகர் ஆகியோர்கள் அ.சா-2 சஞ்சயை கருவ கட்டையால் அடித்தார்கள். மேற்படி எதிரிகள் அடித்ததில் அ.சா-1 மற்றும் அ.சா-2 ஆகியோர்களுக்கு மண்டை உடைந்து விட்டது. அவர்கள் மயங்கி கீழே விழுந்துவிட்டார்கள். அதன் பின்னர் நான் எங்கள் ஊர் பையன்களுக்கு போன் மூலம் பேசி அவர்களை வரசொன்னேன். அதன் பின்னர் காயம் உற்ற அ.சா-1 மற்றும் அ.சா-2

ஆகியோர்களை இரு சக்கர வாகனத்தில் வலங்கைமான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு மருத்துவர்கள் சொன்னதன் பேரில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் அவர்கள் உறவினர்கள் வந்த பின்னர் நான் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். 04.01.2025 ஆம் தேதி நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார். நடந்த விவரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

நாங்கள் வந்த இரு சக்கர வாகனத்தின் வண்டியின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த இரண்டு சக்கர வாகனத்தின் உரிமையாளர் பெயர் எனக்கு தெரியாது என்று சொன்னால் ஆமாம் தெரியாது. அ.சா-1 அபிக்கண்ணன் எத்தனை மணிக்கு உங்களுக்கு போன் செய்தார் என்றால் இரவு 1 மணிக்கு போன் செய்தார். நான் 1 மணிக்கு எங்கள் ஊரில் இருந்து கிளம்பிவிட்டேன். எங்கள் ஊரான மாஞ்சேரிக்கும், குடவாசலிற்கும் எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 9 கிலோமீட்டர் இருக்கும். எங்கள் ஊரிலிருந்து குடவாசல் செல்லவேண்டும் என்றால் எத்தனை மணி நேரத்தில் செல்லலாம் என்றால் 10 நிமிடத்திற்குள் செல்லலாம் என்றால் சரிதான். அ.சா-1 அபிக்கண்ணன் என்ன வேலை செய்கிறால் என்றால் ஓட்டுனராக வேலை செய்கிறார். அவர் எந்த நிறுவனத்தில் பணி புரிகிறார் என்றால் எனக்கு தெரியாது. அ.சா-1 அபிக்கண்ணன் எவ்வளவு காலம் நண்பர் என்றால் நான் 6 ம் வகுப்பு படிக்கும் போதிலிருந்து தெரியும் என்றால் சரிதான். குடவாசல் பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு சக்கர வாகனத்தில் கிளம்பினோம் என்றால் அங்கு இருந்து நான் சென்ற உடனே கிளம்பி விட்டோம். நாங்கள் மூவரும் இரண்டு சக்கர வாகனத்தில் ஒன்றாக வந்தோம் என்றால் சரிதான். சண்டை நடந்ததாக சொல்லும் இடத்திற்கு 1.30 மணியளவில் வந்தோம் என்றால் சரிதான். குடவாசல் - வலங்கைமான் செல்லும் சாலையானது

பேருந்து செல்லக்கூடி சாலை என்றால் சரிதான். குடவாசலுக்கும் வலங்கைமான் வழியாக கோவிந்தக்குடி வரை பேருந்து வசதி உள்ளது என்றால் சரிதான். மேற்படி நாங்கள் செல்லக்கூடிய சாலையில் மின் விளக்குகள் கிடையாது என்றால் அதிக மின் விளக்கு கிடையது. நான் சம்பவ இடத்திற்கு வந்தபோது கூட்டமாக 20-க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். கூட்டத்தில் இருந்த அனைவரும் சத்தம் போட்டுக்கொண்டும், ஆடிக்கொண்டும் இருந்தார்கள் என்றால் ஆமாம். அங்கு இருந்த நபர்கள் அனைவரும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கூட்டத்தில் இருந்த அனைவரும் சத்தம் போட்டு திட்டிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் இருந்த நபர்கள் யாரும் என்னை அடிக்கவில்லை பிடித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் இருந்த 20-க்கும் மேற்பட்ட நபர்களின் பெயர் தெரியுமான என்றால் 2,3 நபர்களின் பெயர்கள் தெரியும் என்றால் சரிதான். அ.சா-1 அபிக்கண்ணனை யார் யார் எந்த பக்கம் அடித்தார்கள் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் மண்டையில் மட்டும் தான் அடித்தார்கள். அ.சா-2 சஞ்சய்-ம் மண்டையில் மட்டும் தான் அடித்தார்கள் என்றால் சரிதான். அந்த சம்பவ இடத்திலிருந்து வலங்கைமான் மருத்துவமனைக்கு உடனே கிளம்பிவிட்டோம் என்றால் சரிதான். போலீசார் விவாரணையில் எனது நண்பர்கள் பெயரை குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. எங்கள் ஊர் பசங்கள் என்று சொன்னேன் என்றால் சரிதான். நான் போன் செய்து எனது நண்பர்களை அழைத்தபோது எனது நண்பர்கள் 4 பேர் வந்தார்கள். ஒரே வாகனத்தில் சென்றோமா என்றால் இல்லை. நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் ஆமாம். நான் தான் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்தேன் என்றால் ஆமாம். என்னை எந்த போலீசார் விசாரித்தார் என்றால் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் வந்து விசாரணை செய்தார் என்றால் சரிதான். என்னை

வலங்கைமான் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா அல்லது நன்னிலம் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து விவாரித்தார்களா என்றால் எனது வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் காலையில் விசாரணை செய்தார் நேரம் எனக்கு நியாபகம் இல்லை. இரண்டு சக்கர வாகனத்தில் 3 நபர்கள் வருவது சட்டப்படி தவறு என்றால் எனக்கு தெரியும். அ.சா-1 அபிக்கண்ணன் எனது நெருங்கிய நண்பர் என்பதால் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.09.26 13:07:00 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.